# சமூக பண்பாட்டுத் தளத்தில் மனிதநேயம்

**க.தேன்மொழி**
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை,
அரசு மகளிர் கலைக்கல்லூரி,
நிலக்கோட்டை

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** 1

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

## முன்னுரை

நவீன உலகில் மனிதநேயம் என்ற சொல்லின் பயன்பாடு நாளுக்கு நாள் குறைந்து கொண்டே இருக்கிறது. இன்றைய மனிதனின் நாகரிகம் எந்தளவுக்கு விரிவடைந்திருக்கின்றதோ, அந்தளவுக்கு மனிதநேயம் குறைந்து கொண்டயிருக்கிறது. ஆதிமனிதன் சுதந்திரமாகச் செயல்பட்டான். தனது வேட்டையில் கிடைத்த மிருக்கத்தின் மாமிசத்தைப் பலரும் பகிர்ந்து உண்டனர். அவனுடைய செயல்பாடுகளில் பொதுநலம் அதிமாகவும் சுயநலம் என்பது குறைந்தும் காணப்பட்டன. நவீன அறிவியல் வளர்ச்சியில் அணு ஆயுதங்கள் மனிதநேயப் பண்புகளை அழித்து அவனை சுயநலக்காரனாக மாற்றியுள்ளன. இத்தகைய மறைந்துபோன மனிதநேயப் பண்புகளை வைரமுத்துவின் உரைநடை வடிவில் அமைந்த படைப்புகளில் மீட்ருவாக்கம் செய்தல் கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

## மனிதநேயத்தின் ஊன்றுகோல் மனிதன்

நாடு, மொழி, இனம், கால எல்லைகளைக் கடந்து ஒட்டுமொத்தமான மனித இனத்தையும், மனிதர் தம் இயல்புகள், பண்புகள், மாண்புகள், யாவற்றையும் உள்ளடக்கிக் காட்டும் ஒரு குறியீட்டுச் சொல்லே மானுடம் ஆகும். ஆங்கிலத்தில் இதனை Humanisam என்பர்.

மனிதநேயம் என்பது மனிதனை மனிதன் அன்பு செய்வதாகும். ஒரு மனிதனை மனிதனாக வாழச் செய்வதற்கான அடிப்படை ஆதாரமாகத் திகழ்வது அன்பு. அந்த அன்பு எவ்விதத் தடையுமின்றி அனைவரிடமும் காட்டப்படுவதே மிகச்சிறந்த மனிதநேயமாகும். மானுடம், மானிடம், மனிதம் என்ற சொற்கள் மனிதப்பண்பின் முழுக்கூறுகளையும் தன்னகத்தே கொண்டது.

மனித வாழ்க்கையை இயக்குவன உள்ளார்ந்த உணர்வுகளேயாகும். உண்மையாகச் சொல்லப்போனால் அன்பு என்ற உணர்வின் பன்முக வடிவங்களே உறவு, பாசம், நட்பு, காதல் எல்லாம். ‘நம்மையொத்த ஒவ்வொரு மனிதனும் நம் உறவினனே’ என்ற பேருணர்வை வளர்ப்பது மனிதநேயமாகும். இன, மொழி, சாதி, நிற வேறுபாடுகளை எல்லாம் முற்றிலும் விலக்கி விட்டு மனிதனை மனிதனாகவே பார்க்கின்ற பெரும் பார்வை மனிதநேயத்தால் மட்டுமே உண்டாகிறது.

உலகத்தின் பரப்பைச் சுருக்கிவிட்ட இன்றைய மனிதன் தனது உள்ளப்பரப்பையும் மிகச்சுருக்கிக் கொண்டுள்ளான். தூரங்களை நெருக்கமாக்கிக்கொண்ட மனிதனானவன் நெருக்கமான உறவுகளை எல்லாம் மிகத்தூரமாக்கிக் கொண்டுள்ளதுதான் இன்றையச் சமூகத்தின் முதன்மைக் குறையாகும்.

பிறப்பு முதல் இறப்பு வரையிலான குடும்ப வாழ்க்கையில் உறவு வட்டம் எவ்வளவு தூரத்திற்குச் சிறப்பும் பெருமையும் மிக்கதோ அதே அளவு சிறப்பும் பெருமையும் சமூக வாழ்க்கையில் நட்புக்கு உண்டு. பொருளாதாரத் தேடல், தனிக்குடும்ப வாழ்க்கை, சாதி, சமயங்கள் இவற்றால் ஏற்படுகிற வாழ்வியல் சிதைவுகள் இவற்றை எல்லாம் மீறி நட்பு என்னும் உறவால் சமூகத்தை அமைதியாக இணைக்கலாம் என்ற எண்ணம் இலக்கியவாதிகளுக்கு மிகுதியாகவே இருக்கிறது. அந்தவகையில் வைரமுத்துவும் தம் படைப்புகளில் மனிதநேயம் குறித்த பதிவுகளை முன்வைத்திருக்கிறார்.

**மனிதநேயத்தின் ஊன்றுகோல் மனிதன்**

‘தண்ணீர் தேசம்’ என்கிற நாவலில், ‘மனிதநேயம்’ குறித்த கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

“ஒரு மனிதன் - எத்தனை நாடுகள் கடந்தான்; எத்தனை கடல்கள் கடைந்தான்; எத்தனை பேரைக் கொன்றான்; எத்தனை மகுடம் கொண்டான்; எத்தனை காலம் இருந்தான்; எத்தனை பிள்ளைகள் ஈன்றான் - என்பவை அல்ல அவன் எச்சங்கள். இவையெல்லாம் நான் என்ற ஆணவத்தின் நீளங்கள். அவன் இன்னோர் உயிருக்காக எத்தனைமுறை அழுதான் என்பதுதான். அவன் மனிதன் என்பதற்கான மாறாத சாட்சி.” (த.தே.ப.189)

அந்த மனிதநேயம் என்ற மகத்தான பண்பு பற்றி சிறப்பானதொரு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

நாவலில் மீனவன் ஒருவனுக்கு மனிதநேயப் பண்பு சுண்டெலி மீது இருந்ததாகக் கூறுகிறார். அந்த படகில் சுண்டெலி ஒன்று மீனவர்களோடு தங்கி இருந்தது. அதில் ஒருவன் பசியினால் அதனைப் பிடித்துத் தின்று விடுகிறான். இச்செய்கைக்காக மீனவன் துயரத்தில் இருந்து மீளமுடியாமல் புலம்பிக் கொண்டிருந்தான். அது பின்வருமாறு:

“பிள்ளை மாதிரி வளர்த்தேனே! பிடித்துத் தின்றுவிட்டானே!” - அவன் எழுத்துக் கூட்டி அழுதான். விடு சலீம்! ஒரு சுண்டெலிக்காக இவ்வளவு சோகப்படுகிறாயே! - பாண்டியின் சொற்களில் அலட்சியம் சொட்டியது சொல்லாதே! அதை வெறும் சுண்டெலி என்று சொல்லாதே! இந்தப் படகின் ஏழாவது ஜீவன் என்று சொல்.” (த.தே.பக்.190-191)

இங்கு ஆறறிவுபெற்ற ஜீவன் ஒன்று சுண்டெலியின் மரணத்திற்காக வருந்தும் மனிதநேய உள்ளம் பதிவு பெற்றுள்ளதைக் காணநேர்கிறது. மனிதநேயம் என்ற உயரிய பண்பு அனைத்து உயிர்களிடத்திலும் காட்டி உறவை வலுப்படுத்த வேண்டும்.

மனிதநேயத்தைச் சமுதாயத்தில் நிலவுகின்ற மனிதர்கள் அனைவருக்கும் கற்றுக் கொடுக்கின்ற கட்டாயத்தில் இருக்கின்றோம். இத்தகைய மனிதநேயம் ‘சிகரங்களை நோக்கி’ நாவலில் இடம்பெற்றுள்ள கருத்துக்களோடு விளக்கப்பட்டுள்ளது.

மனிதனானவன் வாழ்வதற்கு பல வழிகள் உண்டு. வாழக் கற்றுக் கொண்டவன் பல கோணங்களில் தங்களை நிலைநிறுத்திக் கொள்ளலாம்.

“நன்றியுள்ள மரம். தனக்கு இடம் கொடுத்த பாறைக்குக் குடை பிடித்து நிற்கிறதே! முளைப்பதற்கு எந்தப் பாறையிலும் இடமிருக்கிறது; மனிதனுக்குத்தான் வேர்களில்லை.” (சி.நோ.ப.16) என்ற வரிகள் பாறைகளுக்கிடையில் தோன்றிய மரமானது பாறைக்கு நிழல் தருகிறது. அதுபோல் மனிதர்களும் ஒருவருக்கொருவர் உதவி செய்து மனிதாபிமானம் சிறக்க வாழவேண்டும் என்று வலியுறுத்துகிறது.

**மனிதம் வீழ்ச்சியடையக் காரணம் மனிதன்**

மனிதனுக்கு இன்றியமையாது வேண்டப்படுவது மூளையாகும். மனிதனின் சிந்தனைகளையெல்லாம் பாதுகாக்கும் அது பேழையாகச் செயல்படுகின்றது. அவனுக்கு மனிதநேயம் என்ற சிந்தனையை மக்களிடம் வெளிக்கொணரத் தோன்றவில்லையோ! ஆதலால் மனிதர்களை அன்பான இடத்திற்கு அழைக்கின்றனர்.

“மூளையால் வாழும் வாழ்க்கையிலிருந்து மனிதர்களை இதயத்தால் வாழும் வாழ்க்கைக்கு இட்டுச் செல்லப்போகிறேன்” (சி.நோ.ப.10)

மனிதர்கள் யாவரிடமும் மனிதநேயம் மலர வேண்டும். மனிதர்கள் யாவரும் மனிதநேயம் மிக்கவர்களாகச் செயல்பட மாட்டார்களா? அவை என்றைக்கு நடந்தேறவுள்ளன என்ற ஏக்கத்துடன் வைரமுத்து இவ்வரிகளைப் படைத்திருக்கிறார். ஒவ்வொரு நாட்டிலும் ஏற்படும் மாற்றங்களுக்கு முக்கியக்காரணம் விஞ்ஞான வளர்ச்சி ஆகும். விஞ்ஞானத்தின் அதீத வளர்ச்சியானது மனிதனை ஆக்கப் பாதைக்கு இட்டுச் செல்லாமல் அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்கிற நிலையை ஏற்படுத்தியுள்ளது. விஞ்ஞானத் துறையில் வளர்ச்சி எய்துவது என்பது அளப்பரிய செயலாகும். அத்தகையத் துறைகளிலே மனிதர்கள் மதிக்கப்படவேண்டும். ஆனால் இங்கு மனிதர்களிடம் உள்ள கொஞ்சநஞ்ச மனிதநேயமும் மறைந்து வருகின்றன.

‘‘மனிதா! உன் விஞ்ஞானம் விண்வெளிக்குப் போகப்போக உன் மனிதாபிமானம் மண்குழிக்குப் போகிறதே!” (சி.நோ.ப.26) என்ற வரிகள் மனிதாபிமானம் மறைந்து வருவதைப் புலப்படுத்துகின்றன.

பரிணாமமென்றால் வேறுபாடு, வளர்ச்சி எனப் பொருள் கொள்ளப்படுகிறது. ஆனால் இன்று மனிதப் பண்புகளிலிருந்து விலங்குத் தன்மைக்கு மாறுவதை,

“விலங்கிலிருந்து மனிதன் பிறந்தது பரிணாமமென்றால் இன்று மனிதனிலிருந்து விலங்கு பிறக்கிறதே!” (சி.நோ.ப.26) என்று உணர்ச்சியோடு கூறுகிறார். இன்றைய மக்கள் இயற்கையை மறந்து வாழக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். “உனக்குத் தொட்டில் கட்டிய இயற்கைக்கு நீ ஏன் கல்லறை கட்டிட ஆசைப்படுகிறாய்!” (சி.நோ.ப.27) என்ற வரிகள், அழிந்துவரும் இயற்கையைச் சுட்டிக் காட்டுகிறது. நம்மையெல்லாம் நல்வழியில் படைத்த இயற்கையையே தீயசெயல்களுக்கு உட்படுத்துகின்றனர். தன்னை நிராகரித்ததால் ஒரு விஞ்ஞானி நுண்ணுயிர்களைக் கொண்டு மஞ்சள் மழை என்ற தயாரிப்பு மூலம் உலக உயிர்கள் அனைத்தையும் அழிக்க முற்படுகிறார். இந்நிகழ்வே விஞ்ஞான வளர்ச்சியின் அழிவுப் பாதையை நோக்கிச் செல்வதையே விளக்குகின்றது.

ஒருவன் இன்னொருவனுக்கு அடிமை என்ற நிலை அகற்றப்படல் வேண்டும்.

“மேகம் கடலுக்குப் பிறந்ததுதானே; ஆனால் மழையெல்லாம் தனக்கே சொந்தமென்று கடல் கையொப்பம் கேட்பதில்லை. மனித ஜாதிக்கு மட்டும்தான் இந்த விளங்காத விலங்குகள்.” (சி.நோ.,ப.8)

இயற்கைக்கு எந்தவிதமான கட்டுப்பாடுகளும் கிடையாது. அப்படியானால் மழையெல்லாம் கடலுக்குத்தானே சொந்தமாக வேண்டும். ஆகையால் மனிதன் மனிதனாக வாழ வேண்டும். பிறர் பொருட்கள்மீது பற்று ஏற்படாமல் மனிதநேயம் தழைக்க வழிவகுக்க வேண்டும்.

**மனிதப் பண்பு மிக்கவர்கள் மனிதர்கள்**

கருவாச்சி காவியம் நாவலில் மனிதநேயம் மிகுந்த செயல்கள் படைக்கப்பட்டுள்ளன. கள்ளிக்காட்டில் வாழ்கிற மக்கள் அனைவரும் வறுமையில் உழன்றாலும் அம்மக்களுக்கிடையே நிலவிய ஒற்றுமையுணர்வும் மனிதநேயப் பண்பும் அவர்களுக்கு பெருமையைத் தேடித் தந்திருக்கின்றன. காவியத்தில் கருவாச்சியின் தாயான பெரியமூக்கி செய்த செயல் இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

தான் வறுமையில் வாழும்போது இன்னொருவர் இக்கட்டான சூழ்நிலையில் இருப்பதை உணர்ந்து உதவி செய்கின்றாள். சுப்பஞ்செட்டியாரின் மூத்தமகள் திருமணத்தின்போது வைரமோதிரம் போட்டால்தான் தாலி கட்டுவேன் என்று மாப்பிள்ளை அடம் பிடிக்கிறான். இத்தகு நிலையில் மகளின் திருமணம் நின்று விடுமோ என்று அவர் பதறுகிறார். அந்தச் சூழ்நிலையில்தான் பெரியமூக்கி தன் கழுத்தில் கிடந்த மூன்று பவுன் சங்கிலியைக் கழற்றிப் போடுகிறாள். இங்கு அந்தப் பெண்ணின் வாழ்க்கையைக் கருத்தில்கொண்டும், அவருடைய தவிப்பையும் எண்ணிச் செயல்படுகின்றாள். இன்று எத்தனை பேர் இப்படியொரு நிகழ்வைச் செய்ய முன்வருவார்கள்? இங்குப் பெரியமூக்கியின் செயல் மனிதநேய உணர்வுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. கருவாச்சி தனியாளாய் வாழ முற்படுகையில் கணவன் கட்டையன் பலவாறு துன்பத்திற்குள்ளாக்குகிறான். அந்தநேரங்களில் எல்லாம் மனிதநேயம் கொண்ட உள்ளங்களினால் அவள் அரவணைக்கப்படுகிறாள்.

‘காவி நிறத்தில் ஒரு காதல்’ என்ற நாவலில் மனிதநேயம் இல்லாத மானுடத்தை எடுத்துக்காட்டியுள்ளார். சமுதாயத்தில் நாள்தோறும் நிகழ்ந்து கொண்டிருப்பதற்குக் காரணமாக இருப்பது மனிதநேயமில்லா மிருகத்தனமே ஆகும். அன்றையக் காலத்தில் இதுபோன்ற செயல்கள் அவ்வளவாக இல்லை. ‘வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்’ என்று கூறிய வள்ளலார் அஃறிணை உயிர்கள் என்றுகூட பாராது அன்பு செலுத்திய மண்ணில் இன்று நினைத்துக்கூடப் பார்க்காமல் சிலர் செயல்களைச் செய்கின்றனர். நடப்புக் காலத்தில் சகிப்புத்தன்மையும் மனிதநேயமும் என்றால் என்னவென்று கேட்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனை, “பருவமழை பொய்த்தலால் தென்னிந்தியாவில் வறட்சி நிலவுகிறது. மருதூருக்கு அருகே இருபத்தாறு கால்நடைகள் இறந்து விட்டதாக எமது நிருபர் தெரிவிக்கிறார். வடஇந்தியாவில் கடும் மழை பெய்து கொண்டிருக்கிறது. வெள்ளத்தில் சிக்கி நூற்று ஒன்பதுபேர் மாண்டிருப்பார்கள் என அஞ்சப்படுகிறது” (கா.நி.ஒ.கா.,ப.17) என்ற வானொலிச் செய்தியை வைரமுத்து மனிதநேயமில்லா மானுடத்திற்கு எடுத்துக்காட்டாகக் கூறியுள்ள விதம் குறிப்பிடத்தக்கது. ஆகவே உலகில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலைக்க வேண்டுமானால் மனிதர்களின் நலம் மனிதர்களால் பாதுகாக்கப்பட வேண்டும். இத்தகையச் சூழலில் மனிதனின் எதிரி விலங்கு மனம் வாய்ந்த மனிதர்களே என்ற கொடுமை அகற்றப்படவேண்டும்.

**மனிதநேயம் ஓர் அறம்**

போரிடும் போது போரில் யார் யார் கலந்து கொள்ள வேண்டும் என்றும், யார் யார் கலந்து கொள்ளக் கூடாது என்றும் புறநானூறு கூறுகின்றது. ‘வில்லோடு வா நிலவே’ என்ற நாவலில் ஆசான் சேரலாதனுக்குப் போர்க்களத்தில் கடைப்பிடிக்க வேண்டிய அறங்களை வரிசைப்படுத்துகிறார்.

பசு, அந்தணர், பெண்கள், பிணியுடையோர் போன்றோர் போரில் கலந்து கொள்ளக் கூடாது. மேலும், “அச்சத்தால் தலைவிரிகோலமானவன் - பெண்பாற் பெயர் கொண்டவன் - படைக்கலன் இல்லாதவன் - சமமான படை கொள்ளாதவன் - இவர்களும் நீ தொடுக்கும் அம்புக்கு அப்பாற்பட்டவர்கள்.” (வி.வா.நி.,ப.116) என்று எடுத்துக் கூறுகிறார்.

துறவிகளைப் போல தலைவிரி கோலமாய், பரட்டைத் தலையுமாய் இருப்பவர்கள், மஞ்சள் வண்ண உடைகளையும், காவிநிற உடைகளையும் தரித்தவர்கள், சாம்பல் பூசியவர்கள், சைன, பௌத்தத் துறவிகள், பாணர்கள், கருவி இசைவாணர்கள், கூத்தர்கள் போன்றோர் அனைவரும் காக்கப்பட வேண்டியவர்களாகக் குறிப்பிடுகின்றனர்.

“ஆடை களைந்தோர் மீது. புல்மேய்வார் போல வீழ்ந்து கிடப்போர் மீது. தரை கடந்தோடித் தண்ணீரில் இறங்கி விட்டவர் மீது. தங்கள் ஆயுதங்களைத் தரையில் எறிந்து விட்டவர் மீது. ஆதாரமிழந்து நிலைகுலைந்து நிற்பவர்கள் மீது.” (வி.வா.நி.,ப.117) ஆயுதம் செலுத்தக்கூடாது என நினைவுறுத்துகிறார். எல்லாவற்றிற்கும் மேலாக, “மன்னா! போர்க்களத்திற்குப் பெண்களை அழைத்துச் செல்லக் கூடாது என்பது போர் அறம்” (வி.வா.நி.,ப.118) என்று குறிப்பிடுகிறார். மேலே கூறப்பட்டவை அனைத்தும் சேரலாதன் உணர்வதற்காக ஆசானால் கூறப்பட்டவையாகும். சங்க இலக்கியத்தில் புற இலக்கியம் சுட்டும் போர் அறத்தையே முன்நிறுத்துகிறது.

'காவி நிறத்தில் ஒரு காதல்' என்கிற நாவலில் தீவிரவாத அமைப்பும் அதன் நடவடிக்கைகளும் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. மதுபாலா என்கிற பெண் பேசுகிறாள். என் கையில் ஆயுதம் எடுத்திருக்கிறது என்னவோ என் உயிரைப் பணயம் வச்சு நான் எதிர்த்து நின்று போராடுவது தன்னுடைய சுயநலத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக அல்ல. "புனிதமான உணர்ச்சிகளுக்கும் நியாயமான லட்சியங்களுக்கும் தடையா இருக்கிற சகல விதமான சமூக முடிச்சுகளையும் அறுத்தெறியறதுக்குத்தான்." (கா. நி.ஒ.கா.,ப.178) என்று கூறுகிறாள். எங்கள் கூட்டத்தில் பாதிப்பேர் என்னை மாதிரியே ஏதோவொரு வழியில் வாழ்க்கைக்கு வெளியே துரத்தப்பட்டதனால் இந்த மாதிரிக் கூட்டங்களில் சேர்ந்து வாழ்கிறார்கள். இன்றைக்கு வடமாநிலங்களில் நடந்து கொண்டிருக்கின்ற மாவோயிஸ்ட்டுகளின் கடத்தல் நிகழ்வுதான் நினைவுக்கு வருகின்றது.

**எதிர்காலத்தில் மனிதர்களின் நிலைப்பாடுகள்**

மனிதர்களின் கவலையெல்லாம் மக்கள் அனைவரும் ஒற்றுமையுடனும் அமைதியாகவும் வளமைப்பெற்றும் இவ்வுலகில் வலம்வர வேண்டுமென்பதே மனிதநேயம் சார்ந்த கருத்தாக இருக்கவேண்டும். ஆனாலும் அத்தகையதொரு நிலை என்றைக்கு ஏற்படுமோ என்று எதிர்பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றனர். 'தண்ணீர் தேசம்' என்ற நாவலில் இனிவரும் நூற்றாண்டுகளில் உலகம் எப்படி இருக்கும் என்பது கூறப்பட்டுள்ளது.

"போர்தான்: அடுத்த நூற்றாண்டு யுத்தம்தான். மிருக வாழ்க்கை மனிதனுக்குத் திரும்பும். வலிமை உள்ளது மட்டுமே தப்பிக்கும். அன்பு - அறம் - எல்லாம் அன்றில் - அன்னம் பட்டியலில் காணாமல் போகும். அடுத்த நூற்றாண்டில் எவனும் சைவனாய் இருக்க மாட்டான். நரமாமிசம் தின்பான். டீக்கடையில் மனித ரத்தம் விற்கும்." (த.தே.ப.22) என்று அடுத்து வரப்போகும் இன்னல்களை உறுதிப்பட எடுத்தியம்பப்பட்டுள்ளன. மேற்சுட்டிய செய்தியினைப் படிக்கும்போது ஒவ்வொருவருக்கும் அதிர்ச்சியும் வியப்பும்தான் தோன்றுகின்றன. எப்படி அறுதியிட்டுக் கூறமுடியுமென்றால் மக்களிடையே அதற்கான அறிகுறிகள் வெவ்வேறு கோணங்களில் வெளிப்படத் தொடங்கியுள்ளன என்றால் மிகையில்லை. நாட்டில் நிகழ்ந்து கொண்டிருக்கிற கொலை, கொள்ளை, வன்முறை, குண்டு வைத்தல், லஞ்சம் போன்ற நிலைகளை வைத்தே இப்படியொரு நிலை ஏற்படும் என்று கூறுவதாக அமைந்துள்ளது.

**மனிதநேயப் பண்புகளில் சமத்துவம்**

இன்றைய உலகில் நடைமுறையில் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்களிடையே இருந்து சில கூறுகள் களைந்தெறியப்பட வேண்டும். மக்களிடையே உலவிக் கொண்டிருக்கிற திருடன், பிச்சைக்காரன், விலைமகள், கொலைகாரன் இவர்களை வேரொடு அறுத்தெறிந்துவிட்டால் நாட்டில் சமத்துவம், சகோதரத்துவம், அமைதி ஏற்படும். இதனை,

"களையப்பட வேண்டிய திருடனும் பிச்சைக்காரனும் விலைமகளும் கொலைகாரனும் மாறுவேஷத்தில் வாழ்ந்து கொண்டேயிருக்கிறார்கள்." (த.தே.ப.153) என்று மனம் கலங்குகிறார். இப்படியொரு நிலையில் மனிதன் தன் வாழ்க்கையில் பல மாற்றங்களைக் கண்டு வந்திருக்கிறான். மாறிப்போன மனிதனின் பிற்போக்கான செயல்களுக்கும் மனம் வருந்துவதாக அமைந்துள்ளது.

"மனிதன் வெவ்வேறு வடிவங்களில் திருடுகிறான்; வெவ்வேறு வடிவங்களில் பிச்சையெடுக்கிறான்; வெவ்வேறு வடிவங்களில் விபசாரம் நடக்கிறது; வெவ்வேறு வடிவங்களில் கொலையும் விழுகிறது. பூமி மட்டும் சுற்றிக் கொண்டேயிருக்கிறது. தன் நிறைவேறாத கனவை நெஞ்சில் சுமந்து கொண்டே." (த.தே.பக்.153-154) என்று இன்றைய மனிதர்கள் புரியும் இழிவான செயல்களைக் கண்டும் குமுறுவதாக இடம்பெற்றுள்ளன. ஆனாலும் எதையும் அறியாத கனவோடு பூமி மட்டும் இடைவிடாது சுழன்று கொண்டுதானிருக்கிறது என்று கூறுகிறார்.

'தண்ணீர் தேசம்' என்ற நாவலில் மனிதசமூகம் இன்றைய நிலையில் எப்படியெல்லாம் மாற்றம் கண்டிருக்கிறது என்பது இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. மனிதர்கள் இன்று வெளிப்படையாய்

மட்டுமே சிரித்து வாழ்கிறார்கள். மனித வாழ்க்கை மட்டும் ஏன் இப்படி மாறிப்போனது என்று அறுதியிட்டுக் கூற இயலவில்லை. மனிதனிடம் இயற்கையாய் இருந்த மகிழ்ச்சியானது இன்றைக்கு அவனிடம் இருந்து தொலைந்து போய்விட்டது. தனக்காக இல்லாவிட்டாலும் பிறருக்காக வாழ்கின்ற நிலையில் மனிதன் ஒரு காலத்தில் காணப்பட்டான். இன்றோ அவனிடம் சுயநலம் என்ற தொற்று அவனை விடாமல் துரத்திக் கொண்டு வருகிறது. இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்ட வைரமுத்து.

“சமூகம் வரவர இறுகிக்கொண்டே வருகிறது. மனிதன் கெட்டிப்பட்டுப் போனான். நான்கு அறைகள் கொண்ட இதயம் இறுகி இறுகி ஒரே அறையில் இயங்கப் பழகி விட்டது. பாலையில் நீர் காணப் போராடலாம்; பாறையில் பயிர் வளர்க்கப் போராடலாம். ஆனால், சுத்தம் அழிந்த இந்தச் சமூக அமைப்பில் சுவாசிக்கக்கூடப் போராட வேண்டியிருக்கிறது.” (த.தே.பக்.251-252) என்று மனம் வெதும்பிப் பேசுவதாக இப்பகுதி அமைந்துள்ளது. மேற்சொன்ன வரிகள் மக்களின் நிகழ்கால வாழ்வியலை எடுத்துரைப்பதாக அமைகிறது. இந்தநிலை தொடர்ந்து கொண்டிருந்தால் ஒவ்வொருவரிடமும் சுயநலம் மிகுந்து பொதுநலமானது உறுத்தெரியாமல் அழிந்து போய்விடும். இத்தகையதொரு நிலையை மாற்ற ஒவ்வொரு மனிதனும் தன்னை மாற்றிக் கொண்டு நல்ல சிந்தனையோடும், தொலைநோக்குப் பார்வையோடும் செயல்படல் வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**முடிவுரை**

இன்று உலகில் நிலவும் அச்சம் நிறைந்த சூழ்நிலையை மாற்றியமைத்து உலகைக் காக்கவேண்டின் அதற்கு முதன்மை ஆதாரமாக வேண்டப்படுவது மனிதநேயமாகும். இன்றையக் காலகட்டத்தில் உலகமெங்கும் ஏற்பட்ட இயற்கையின் பாதிப்பால் இலட்சக்கணக்கான மக்கள் வாழ்வை இழந்து தவிக்கின்றார்கள். போதாத குறைக்கு ஒவ்வொரு நாட்டிலும் நடக்கின்ற வன்முறையாலும் குண்டுவெடிப்புகளாலும் கலவரங்களாலும் மனிதர்களிடையே மனிதநேயம் மறைந்துகொண்டே வருவதை மறக்கவோ மறைக்கவோ முடியாது. ஆகையால்தான் எந்தக் காலத்திலும் தேவைப்படாத அளவிற்கு இன்று மனிதநேயம் ஒவ்வொரு மனிதனுக்கும் இன்றியமையாது வேண்டப்படுகிறது. சமூகப் பண்பாட்டுத் தளத்தில் மனிதநேயம் பற்றிய கருத்துக்கள் வைரமுத்துவின் படைப்புகளுள் மிகுதியாக ஆக்கிரமித்துள்ளன.

**பார்வை நூல்கள்**

1. வைரமுத்து, தண்ணீர் தேசம்
2. வைரமுத்து, சிகரங்களை நோக்கி
3. கார்த்திகேசு சிவத்தம்பி, தமிழிலக்கியத்தில் மதமும் மானுடமும் இலக்கிய வரலாற்றாய்வு
4. வைரமுத்து. கருவாச்சிகாவியம்